இருப்பவர்களைக்கொண்டு தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அப்படி இருப்பவர்களைக் கொண்டு, தேர்தல் நடத்தி, அவர்கள் அதிகாரத்திலே வந்து, புதிய உறுப்பினர்களைச் சேர்க்கலாம். முடியாத காரியத்திற்குக் குற்றஞ்சாட்டி வெளியேறுவது என்பது, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து செய்து வருகிற ஒரு காரியம் என்பதை முதலில் நான் சொல்லி, என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இந்தத் தீர்மானம்.

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32—ஐ, 30—8—2006 புதன்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (30—8—2006) புதன்கிழமை அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30—8—2006) புதன்கிழமை காலை 9—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.